# பாலர்

# கதைக் கோவை

## முதல் புத்தகம்

சிறுவர்க்குரிய

சிறுகதைத் தொகுதி

பாலர்

# கதைக் கோவை

## முதல் புத்தகம்


வி. சூ. சுவாமிநாதன்

எடுகேஷனல் பப்ளிஷர்

மதுரை :: திருநெல்வேலி


பதிப்புரிமை] [விலை 0—2—6

Fourth Edition-Jan. 1949. 4000 Copies Code word-W.

BARATHI PRESS, MADURA.

8

# பாலர் கதைக் கோவை

## முதல் புத்தகம்

---


### 1. பூனைக்கு மணிகட்டுவது யார்?

ஒரு வீட்டில் பல எலிகள் வசித்து வந்தன. அவைகளால் வீட்டிலிருந்தவர்களுக்கு அதிகக் கஷ்டம் ஏற்பட்டது. அவை பகலில்கூட வெளியே வந்துவிடும். ஆகாரத்தைத் திருடிக் கொண்டு போய்விடும்.



அந்த வீட்டுக்கு ஒரு பூனை வந்தது. அது ஒரு பெரியமுரட்டுப்

பூனை. அது எலிகளைப் பிடித்துத் தின்ன ஆரம்பித்தது. எலிகள் பயந்து வளைகளில் ஒளிந்து கொண்டன. இரவு வேளையில் கூட எலிகள் வெளியே வர முடியவில்லை. தப்பித் தவறி வெளியே வந்த சில எலிகளைப் பூனை கொன்று தின்று விட்டது.



இரண்டு நாட்கள் எலிகள் வெளியே வராமல் இருந்தன. அவைகளுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. அவைகள் ஒரு கூட்டம் போட்டன. பூனையிடமிருந்து

தப்ப என்ன செய்யலாம் என்று யோசித்தன.

கடைசியாக ஒரு சிறு எலி, "பூனையிடமிருந்து தப்ப நான் ஒரு வழி சொல்லுகிறேன். பூனையின் கழுத்தில் ஒரு மணியைக் கட்டி விட வேண்டும். பூனை நடந்துவரும்பொழுது அந்த மணி அடிக்கும். அதனால் பூனை எங்கே இருக்கிறது என்று நமக்குத் தெரிந்துவிடும். இது தான் நல்ல வழி" என்றது.

மற்ற எலிகள் இதைக் கேட்டுச் சந்தோஷத்தால் குதித்தன. பூனைக்கு இனிமேல் பயப்பட வேண்டாம் என்று நினைத்தன. அப்பொழுது ஒரு கிழ எலி எழுந்து, "இது நல்ல யோசனை தான். ஆனால் பூனையின் கழுத்தில்

மணியைக் கட்டுவது யார்?" என்று கேட்டது.

எந்த எலியும் இதற்குப் பதில் சொல்லவில்லை. எலிகளுடைய சந்தோஷம் மறைந்தது. சில காரியங்கள் பார்ப்பதற்கு இலேசாக இருக்கும். ஆனால் செய்வதற்கு மிகக் கஷ்டம்.



## 2. ஓநாயும் கொக்கும்

ஒரு காட்டில் ஓநாய் ஒன்று இருந்தது. அது ஒரு நாள் ஒரு பிராணியைக் கொன்று தின்றது. அப்பொழுது ஒரு எலும்பு அதன் தொண்டையில் சிக்கிக் கொண்டது. எலும்பை வெளியே எடுக்க அதனால் முடியவில்லை. வலி பொறுக்க முடியாமல் அது ஊளையிட்டுக் கொண்டே சென்றது. எலும்பை எடுப்பவர்களுக்கு நிறையப் பரிசு தருவதாக அது சொல்லிற்று. முதலில் எந்தப் பிராணியும் ஓநாய்க்கு உதவி செய்ய வரவில்லை.

கடைசியாக ஒரு கொக்கு ஓநாயைப் பார்த்தது. அது ஓநாய்க்கு உதவி செய்வதாகச் சொல்லிற்று. ஓநாய் தன் வாயை

நன்றாகத் திறந்துகொண்டது. கொக்கின் கழுத்து நீளமாக இருக்குமல்லவா? அது தன் கழுத்தை ஓநாயின் வாய்க்குள்



நுழைத்தது. தன் அலகினால் தொண்டையிலிருந்த எலும்பைப் பிடித்து வெளியே இழுத்தது. எலும்பு வெளியே வந்துவிட்டது.

கொக்கு ஓநாயிடம் பரிசுகேட்டது. ஓநாய் உறுமிக் கொண்டு,

"உனக்குப் பரிசு வேறே வேண்டுமா? எலும்பை எடுக்கும்போதே உன் கழுத்தைக் கடிக்காமல் விட்டேனே. அதுவே உனக்குப் பெரிய பரிசு அல்லவா?" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டது.

சிலர் இந்த ஓநாயைப் போன்றவர்கள். நல்லது செய்வோருக்கும் இவர்கள் தீங்கு செய்ய நினைப்பார்கள்.


---

## 3. சிங்கமும் நான்கு எருதுகளும்

நான்கு எருதுகள் தமக்குள் மிக ஒற்றுமையாக இருந்தன. அவை ஒரு காட்டுக்கு அருகே புல் மேய்வது வழக்கம். அந்தக் காட்டில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. எருதுகளைக் கொன்று தின்ன அதற்கு வெகு ஆசை. ஆனால் நான்கு எருதுகளையும் ஒரே சமயத்தில் எதிர்க்கச் சிங்கத்திற்குப் பயமாயிருந்தது. அவைகள் ஒன்றுக்கொன்று உதவி செய்துகொண்டால் சிங்கத்தைக் கூடக் கொன்று விடும். ஆகையால் அவைகளைப் பிரித்துவிட வேண்டுமென்று சிங்கம் எண்ணியது.

ஒரு நாள் ஒரு எருது தன் சிநேகிதர்களைப் பிரிந்து சற்று தூரத்

தில் மேய்ந்தது. சிங்கம் மெல்ல அதனருகே சென்றது. மற்ற எருதுகளிடம் அதற்குப்



பொறாமை உண்டாகும்படி பேசிற்று. "உன் நண்பர்கள் உன்னை இழிவாகப் பேசினார்கள். உனக்குப் பலமே இல்லை என்று கேலி செய்தார்கள்" என்றெல்லாம் சிங்கம் சொல்லிற்று. இந்த மாதிரியே சமயம் பார்த்து மற்ற எருதுகளிடமும் சொன்னது.

சிங்கத்தின் தந்திரப் பேச்சி னால் எருதுகளுக்குள் பொருமை ஏற்பட்டது. அன்று முதல் அவை



வெகுதூரத்தில் தனித்தனியே புல் மேய ஆரம்பித்தன. சிங்கத்திற்கு இது சந்தோஷத்தைக் கொடுத் தது. சிங்கம் தனக்கு வேண்டிய பொழுது ஒவ்வொரு எருதாகக் கொன்று தின்றது.

"ஒற்றுமையே பலம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற வாக்கியங்களை மறக்கக் கூடாது.

---


# 4. நரியின் தந்திரம்

ஒரு காட்டிலிருந்த நரி ஆகாரம் தேடுவதற்காக அலைந்து கொண்டிருந்தது. அப்பொழுது



அது தவறி ஒரு கிணற்றில் விழுந்துவிட்டது. கிணறு அதிக ஆழமாக இல்லை. இருந்தாலும் நரியினுல் அதிலிருந்து வெளியே வரமுடியவில்லை. சிறிது நேரத்

திற்குப் பிறகு அங்கே ஓர் ஆடு வந்தது. கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தது. நரியைப் பார்த்த ஆடு, "நரியாரே! தண்ணீர் நன்றா யிருக்கிறதா?" என்று கேட்டது.



நரி, "என்ன சொல்வேன்! தண்ணீர் மிகவும் இனிப்பாயிருக் கிறது. இதைவிட்டுப் போகவே எனக்கு இஷ்டமில்லை" என்றது.

ஆடு சிறிதுகூட சந்தேகப் படாமல் கிணற்றுக்குள் குதித்தது. நரி உடனே அதன் முதுகின் மேல் தாவி ஏறி வெளியே வந்து விட்டது. கரையின்மேல் நின்று கொண்ட நரி, "நான் கரையேற உதவி செய்ததற்கு மிகவும் வந்தனம். நிறையத் தண்ணீர் குடித்து விட்டு அப்புறம் நீ வந்து சேர்" என்று சொல்லிப் போய்விட்டது.

வஞ்சகம் உள்ளவர் தந்திரமாகப் பேசுவர்; அவர்களுடைய வார்த்தைகளை நம்பிவிடக் கூடாது.

---

## 5. நாயும் கழுதையும்

ஒரு நாயும் கழுதையும் சேர்ந்து பிரயாணஞ் செய்தன. கழுதையின் முதுகில் ரொட்டித் துண்டுகள் நிறைந்த மூட்டை யொன்று இருந்தது. வெகுநேரம் நடந்ததால் இரண்டும் மிகவும் களைப்பு அடைந்தன. அவை களுக்குப் பசியும் அதிகமாகி விட்டது. உடனே கழுதை பாதையின் ஓரத்தில் வளர்ந்திருந்த செடிகளை மேய ஆரம்பித்தது. இதைப் பார்த்த நாய்க்குப் பசி அதிகமாகி விட்டது. அது கழுதையைப் பார்த்து, "உன் மூட்டையி லிருக்கும் ரொட்டிகளில் ஒன்று தா" என்று கெஞ்சிக் கேட்டது.


கழுதை, "உனக்குப் பசித்தால் நீ என்னைப் போல் உணவு

தேடிக் கொள்ள வேண்டும். உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ரொட்டி இல்லை" என்றது.

அப்பொழுது தூரத்தில் அவைகளை நோக்கி ஒரு ஓநாய் வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த கழுதை நடுங்கிவிட்டது. கழுதை நாயைப் பார்த்து, "நண்பனே! இப்பொழுது என்னைக் கைவிடாதே. ஓநாய் என்னை எதிர்த்தால், நீ என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டது.

நாய், "உன்னைக் காப்பாற்ற என்னால் முடியாது. தனியே உணவு சாப்பிடுபவர்கள், தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்" என்று சொல்லி ஓடிப்போய் விட்டது.

தனியே விடப்பட்ட கழுதை ஓநாய்க்கு இரையாயிற்று.




நாம் பிறருடைய சிநேகத்தை விரும்பினால், நாமும் பிறரிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

## 6. கரடியும் பிரயாணிகளும்

இரண்டு நண்பர்கள் ஒரு காட்டு வழியே பிரயாணஞ் செய்து கொண்டிருந்தார்கள். காட்டு வழியில் பல ஆபத்துக்கள் உண்டு என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகையால் என்ன கஷ்டம் வந்தாலும் ஒருவருக் கொருவர் உதவி செய்வதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

கொஞ்ச தூரம் போனதும் அவர்கள் ஒரு கரடி வருவதைப் பார்த்தார்கள். கண்டதும் மிகவும் பயந்து போனுர்கள். அவர்களில் ஒருவனுக்கு மரம் ஏறத் தெரியும். அவன் உடனே பக்கத்தில் இருந்த மரத்தில் ஏறிக்கொண்டான். மற்றவனுக்கு மரம் ஏறத் தெரி யாது. அவன் என்ன செய்வ

தென்று தெரியாமல் சற்று யோசித்தான். கரடி இறந்தவர்களைத் தின்னாது என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் அவன்



தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு மூச்சை அடக்கிக் கொண்டான். சற்று நேரத்தில் கரடி அவனருகே வந்தது. அவனைச் சிறிது நேரம் முகர்ந்து

பார்த்தது. இறந்து விட்டதாக எண்ணி அவனை ஒன்றுஞ் செய்யாமல் போய்விட்டது.

கரடி போன பிறகு மரத்தில் இருந்தவன் கீழே இறங்கி வந்தான். கீழே படுத்திருந்தவனும் எழுந்து உட்கார்ந்தான். மரத்தில் ஏறியவன் தன் நண்பனைப் பார்த்து, "கரடி உன் காதருகே தலையை வைத்துக்கொண்டிருந்ததே! அப்பொழுது உன்னிடம் என்ன ரகசியம் சொல்லிற்று?" என்று கேட்டான்.

அதற்கு அந்த நண்பன், "பெரிய ரகசியம் ஒன்றுமில்லை. ஆபத்து வரும்பொழுது கைவிடும் உன்னைப்போன்ற நண்பர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று சொல்லிற்று" என்றான்.

ஆபத்து வந்தபொழுது நண்பனைக் கைவிடாதவனே உண்மைச் சிநேகிதன் ஆவன்.


---

## 7. சிங்கமும் சுண்டெலியும்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அதுதான் அக் காட்டிற்கு ராஜா. மற்ற மிருகங்களெல்லாம் அதற்குப் பயந்து வாழ்ந்து வந்தன. ஒரு நாள் அந்தச் சிங்கம் ஒரு மரத்தடியில் படுத்துத் தூங்கியது. அம் மரத்தடியில் ஒரு எலி வளை உண்டு. அதிலிருந்த ஒரு சுண்டெலி வெளியே வந்து குதித்து விளையாடியது. சந்தோஷத்தில் அது சிங்கத்தின் மேல் விழுந்தது.

சிங்கம் தூக்கம் கலைந்து எழுந்தது. சுண்டெலியின் வால் அதன் காலில் அகப்பட்டுக் கொண்டது. எலி கீச்சுகீச் சென்று கத்திற்று. சிங்கம் குனிந்து கீழே இருந்த எலியைக்

கண்டது. அது, "ஏ, அற்பப்பிராணியே! நீயா என் தூக்கத்தைக் கலைத்தாய்? உன்னைக் கொன்று விடுகிறேன், பார்!" என்றது. எலி



நடுங்கிப்போய், "மகாராஜா! மன்னிக்கவேண்டும். தெரியாமல் செய்து விட்டேன். என்னைக் கொல்லாமல் விட்டு விடுங்கள். இந்த உதவியை நான் எப்பொழுதும் மறக்கமாட்டேன்" என்று

கெஞ்சிற்று. சிங்கம் அதன்மேல் இரக்கப்பட்டு அதை விட்டு விட்டது.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் சிங்கம் வேட்டையாடச் சென்றது. வழியில் ஒரு வேடன் பலத்த கயிறுகளால் ஒரு வலை கட்டியிருந்தான். சிங்கம் அதில் அகப்பட்டுக்கொண்டது. அதிலிருந்து தப்ப, கயிற்றை அப்படியும் இப்படியும் இழுத்தது. கயிறு இன்னும் நன்ருக இறுகிவிட்டது. சிங்கம் தப்பியோட முடியவில்லை. அது பலமாகக் கர்ஜித்தது. அருகேயிருந்த பிராணிகள் இந்தக் கர்ஜனையைக் கேட்டுப் பயந்து ஓடின.

சுண்டெலி காதிலும் அந்தச் சப்தம் விழுந்தது. தன்னைக்

கொல்லாமல் விட்ட சிங்கத்தின் கர்ஜனை தான் என்று அது தெரிந்துகொண்டது. உடனே அது சிங்கத்தினிடம் போயிற்று. "கீச், கீச்! மகாராஜா! நான் உங்களை விடுவிக்கிறேன்" என்றது.

"நீ எப்படி என்னை விடுவிப்பாய்?" என்று சிங்கம் கேட்டது.

"இதோ பாருங்கள் என் வேலையை! கீச், கீச்!" என்று சொல்லிவிட்டு, அந்த எலி வலையின் கயிற்றைத் தன் கூர்மையான பற்களால் சிறிது சிறிதாக அறுத்தது. சற்று நேரத்தில் சிங்கம் வலையிலிருந்து விடுபட்டது.

சந்தோஷங் கொண்ட சிங்கம், "உன்னால் நான் உயிர் தப்பினேன். உன்னை அற்பமாக நான் நினைத்தது தவறு. உன்னை நான்

எப்பொழுதும் மறக்கமாட்டேன்" என்றது.

அதற்கு எலி, "முன்னொரு நாள் நீங்கள் என்னைக் கொல்லாமல் விட்டீர்கள். அதை நான் மறப்பேனா! நான் எப்பொழுதும் உங்களுக்கு ஊழியம் செய்யத் தயார். கீச், கீச்!" என்று சொல்லி விட்டுப் போயிற்று. சிங்கம் அது முதல் யாரையும் அற்பமாக எண்ணக்கூடாது என்று தெரிந்து கொண்டது.



வி. கூ. சுவாமிநாதன்

எடுகேஷனல் பப்ளிஷர்

மதுரை :: திருநெல்வேலி

பதிப்புரிமை]

[விலை 0—2—6